# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 55

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) நகர்ப்புற பகுதி என்றால் என்ன?

**பதில் :** ஒரு நகர்ப்புற பகுதி என்பது அதிக மக்கள் தொகை அடர்த்தியோடு உணவு உற்பத்தியில்லாத தொழில்களில் ஈடுபடுவதும் நன்கு கட்டமைக்கப்பட்ட சூழலில் வாழ்வது ஆகும்.

2) மலைப்பிரதேசங்கள் காலனித்துவ நகர்ப்புற வளர்ச்சியில் தனித்துவமான அம்சமாக இருந்தன. ஏன்?

**பதில் :** 1. குளிர்ந்த கால நிலையிலிருந்து வந்த ஆங்கிலேயர்கள் இந்திய மலைகளின் குளிர்ந்த காலநிலை பாதுகாப்பானதாக மற்றும் தன்மை அளிப்பதாக இருந்தது.
2. இது வெப்பமான வானிலையிலிருந்தும் தொற்று நோயிலிருந்தும் ஐரோப்பியர்களைப் பாதுகாத்தது.
3. ஆகையால் அவர்கள் மாற்றுத் தலைநகரங்களை குளிர்ந்த பகுதிகளில் ஏற்படுத்தினர்.

3) மாகாண நகரங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பதில் :** கல்கத்தா, பம்பாய் மற்றும் மதராஸ்

4) 19 ஆம் நூற்றாண்டில் நகரமயமாக்கலின் புதிய போக்குக்கு ஏதேனும் நான்கு காரணங்களைக் கூறுக.

**பதில் :** 19ஆம் நூற்றாண்டில் நகரமயமாக்கலின் புதிய போக்குக்கான காரணங்கள் :
1. சூயஸ் கால்வாய் திறப்பு, நீராவிப் போக்குவரத்து அறிமுகம்.
2. இரயில்வே சாலைகள் அமைத்தல், கால்வாய்கள், துறைமுகங்கள்.
3. தொழிற்சாலைகளின் வளர்ச்சி, நிலக்கரிச் சுரங்கம், தேயிலைத் தோட்டம்.
4. வங்கிப்பணி, கப்பல் போக்குவரத்து மற்றும் காப்பீடு வளர்ச்சி.

5) இராணுவ குடியிருப்பு நகரங்கள் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

**பதில் :** 1. ஆங்கிலேயர்கள் வலுவான இராணுவ முகாம்கள் தேவைப்பட்டதால் இராணுவக் குடியிருப்புகளை ஏற்படுத்தினர்.
2. இராணுவக் குடியிருப்புகள் முற்றிலும் புதிய நகர்ப்புற மையங்களாக இருந்தன.
3. இராணுவ வீரர்கள் இந்த பகுதிகளில் வசிக்கத் தொடங்கினர் மேலும் இப்பகுதிகள் படிப்படியாக நகரங்களாக வளர்ந்தன. (எ.கா.) கான்பூர், லாகூர்.

6) பிரிட்டிஷ் ஆட்சியின் போது மதராஸ் மாகாணம் உள்ளடக்கிய பகுதிகள் யாவை?

**பதில் :** **மதராஸ் மாகாணம் உள்ளடக்கிய பகுதிகள்:** தற்போதைய தமிழ்நாடு, லட்சத்தீவு, வடக்கு கேரளா, ராயலசீமா, கடலோர ஆந்திரா, கர்நாடக மாவட்டங்கள் மற்றும் தெற்கு ஒரிசாவின் பல்வேறு மாவட்டங்களை கொண்டிருந்தது.

7) துறைமுக நகரங்கள் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** (i) ஆங்கிலேயர்கள் வர்த்தகத்திற்காக இந்தியா வந்தனர். மதராஸ், கல்கத்தா மற்றும் பம்பாய் ஆகியவை முக்கிய துறைமுகங்களாக மாறின.
(ii) இவை வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகித்தன. ஐரோப்பிய பாணியிலான உயரமான கட்டடங்களுடன் இந்த நகரங்கள் முக்கிய வணிகப் பகுதிகளாக மாறின.
(iii) ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம் அதன் தொழிற்சாலைகளை அமைத்ததோடு குடியேற்றத்தின் பாதுகாப்பிற்காக கோட்டைகளையும் அமைத்தனர்.
(iv) சென்னையின் புனித ஜார்ஜ் கோட்டையும் கல்கத்தாவின் புனித வில்லியம் கோட்டையும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

8) இந்தியாவிலுள்ள சில கோடை வாழிடங்களை குறிப்பிடுக.

**பதில் :** (i) சிம்லா

**பதில் :** (i) சிம்லா
(ii) நைனிடால்
(iii) டார்ஜிலிங்
(iv) டேராடூன்
(v) உதகமண்டலம்
(vi) கொடைக்கானல்

9) பம்பாய் நகரம் பற்றி சிறு குறிப்பு தருக.

**பதில் :** (i) பம்பாய் ஏழு தீவுகளைக் கொண்டதாகும். இது 1534 - லிருந்து போர்ச்சுக்கீசியர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.
(ii) இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் போர்த்துக்கீசிய மன்னரின் சகோதரியை திருமணம் செய்து கொண்டதற்கு பம்பாய் பகுதியை சீதனமாகப் பெற்றார்.
(iii) மன்னர் அப்பகுதியை 'கிழக்கிந்திய வணிகக் குழுவிற்கு குத்தகைக்கு அளித்தார்.
(iv) கிழக்கிந்திய கம்பெனி மேற்கு இந்தியாவில் அதன் முக்கிய துறைமுகமாக பம்பாயை பயன்படுத்தத் தொடங்கியபோது பம்பாய் நகரம் வளரத்தொடங்கியது.
(v) ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம் 1687 ஆம் ஆண்டு அதன் தலைமையகத்தை சூரத்தில் இருந்து பம்பாய்க்கு மாற்றியது.

10) பண்டைய கால நகரங்கள் சிலவற்றை கூறுக.

**பதில் :** ஹரப்பா, மொகஞ்சதாரோ, வாரணாசி, அலகாபாத் மற்றும் மதுரை ஆகியவை புகழ்பெற்ற பண்டையகால நகரங்கள் ஆகும்.

11) துறைமுக நகரங்கள் சிலவற்றை எழுதுக.

**பதில் :** மதராஸ், கல்கத்தா மற்றும் பம்பாய் ஆகியவை முக்கிய துறைமுகங்களாக மாறின.

12) கடலோர நகரங்கள் சிலவற்றை எழுதுக.

**பதில் :** சூரத், டாமன், கோவா மற்றும் பாண்டிச்சேரி ஆகியவை கடலோர நகரங்கள் ஆகும்.

13) புதிய நகர மையங்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன? அவை யாவை?

**பதில் :** புதிய நகர மையங்கள்
1. துறைமுக நகரங்கள்
2. இராணுவ குடியிருப்பு நகரங்கள்
3. மலைவாழிடங்கள்
4. இரயில்வே நகரங்கள் ஆகும்.

14) மாகாண நகரங்களின் நிர்வாகம் பற்றி விளக்கவும்.


**பதில் :** 1. தலைமை ஆளுநருக்கு மாகாண நகரங்களில் அமைதியை ஏற்படுத்த நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரத்தை அளித்தது.
2. பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு மூன்று மாகாண நகரங்களில் அரசாங்க அமைப்பு உருவாக்கப்பட்டது.
3. அது பெரிய மாநகராட்சிகள் போல தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், சுதந்திரமான வலிமை பெற்ற நிர்வாக அமைப்பு, கணக்குகளை சரிபார்க்கப் போதுமான ஏற்பாடுகள், பாதுகாப்பு மற்றும் செயல்திறனுக்கான சட்டபூர்வ பாதுகாப்புகள், சுகாதாரம், நீர் வழங்கல் மற்றும் வருவாய் வசூல் போன்ற முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

15) கல்கத்தா எவ்வாறு ஆங்கிலேயர்களின் காலத்தில் மாகாணமாக மாறியது?

**பதில் :** 1. ஆங்கில வணிகர்கள் சுதநூதியில் 1690ஆம் ஆண்டு ஒரு குடியேற்றத்தை நிறுவினர்.
2. அவர்கள் சுதநூதி, கல்கத்தா மற்றும் கோவிந்தபூர் மீது ஜமீன்தாரி உரிமைகளை 1698ஆம் ஆண்டில் பெற்றனர்.
3. ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனம் கல்கத்தாவில் வில்லியம் கோட்டையை நிறுவியது.
4. கல்கத்தா மாகாணமாக மாறியதோடு அதன் அலுவல்களை நிர்வகிக்க ஆளுநர் மற்றும் குழு இருந்தது.

## <u>5 மதிப்பெண் வினாக்கள்</u> 5 x 5 = 25

16) காலனித்துவ நகர்ப்புற வளர்ச்சியை பற்றி விளக்குக.

பதில் : 


**1. துறைமுக நகரங்கள் :**

i. ஆங்கிலேயர்கள் வர்த்தகத்திற்காக இந்தியா வந்தனர். மதராஸ், கல்கத்தா மற்றும் பம்பாய் ஆகியவை முக்கிய துறைமுகங்களாக மாறின. இவை வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகித்தன.

ii. ஐரோப்பிய பாணியிலான உயரமான கட்டடங்களுடன் இந்த நகரங்கள் முக்கிய வணிகப் பகுதிகளாக மாறின.

iii. ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம் அதன் தொழிற்சாலைகளை அமைத்ததோடு குடியேற்றத்தின் பாதுகாப்பிற்காக கோட்டைகளையும் அமைத்தனர்.

iv. சென்னையில் புனித ஜார்ஜ் கோட்டையும், கல்கத்தாவில் புனித வில்லியம் கோட்டையும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

**2. இராணுவக் குடியிருப்பு நகரங்கள்:**

i. ஆங்கிலேயர் தங்கள் இராணுவ பலத்தால் இந்தியப் பகுதிகளையும், அரசியல் அதிகாரத்தையும் கைப்பற்றினர்.

ii. எனவே, வலுவான இராணுவ முகாம்கள் தேவைப்பட்டதால் இராணுவக் குடியிருப்புகளை ஏற்படுத்தினர்.

iii. இராணுவக் குடியிருப்புகள் முற்றிலும் புதிய நகர்ப்புற மையங்களாக இருந்தன.

iv. இராணுவ வீரர்கள் இந்த பகுதிகளில் வசிக்கத் தொடங்கினர். மேலும் இப்பகுதிகள் படிப்படியாக நகரங்களாக வளர்ந்தன. எடுத்துக்காட்டு: கான்பூர், லாகூர்.

**3. மலை வாழிடங்கள்:**

i. காலனித்துவ நகர்ப்புற வளர்ச்சியில் மலைவாழிடங்கள் தனித்துவம் வாய்ந்தவையாகும்.

ii. ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பு மலைவாழிடங்கள் பற்றி அறியப்படவில்லை.

iii. அவை சிலவாக இருந்ததோடு குறைந்த மக்கள்தொகையைக் கொண்டிருந்தன.

iv. அவர்களும் குறிப்பிட்ட தேவைகளுக்காகவே அடிக்கடி வருகை புரிந்தனர்.

V. எடுத்துக்காட்டாக ஸ்ரீநகர் ஒரு முகலாய பொழுதுபோக்கு மையமாகவும் கேதர்நாத் மற்றும் பத்ரிநாத் ஆகியவை இந்து சமய மையங்களாகவும் விளங்கின.

**4. இரயில்வே நகரங்கள்:**

i. ஆங்கிலேயர்களால் இரயில்வே 1853இல் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு இரயில்வே நகரங்களும் ஒருவகை நகர்ப்புற குடியேற்றங்களாக ஏற்படுத்தப்பட்டன.

ii. இரயில் போக்குவரத்தின் இயல்பினால் அனைத்து நகரங்களும் சமவெளியில் அமைந்திருந்தன.

17) மதராஸின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை பற்றி எடுத்துரைக்கவும்.

பதில் : 1. ஆங்கில வணிகரான பிரான்சிஸ்டே 1637ஆம் ஆண்டு ஒரு புதிய குடியேற்றத்திற்கான தளத்தை தேர்ந்தெடுத்தார் அது மதராசப்பட்டினம் ஆகும்.

2. சந்திரகிரி அரசரின் பிரதிநிதியான தமர்லா வெங்கடபதி அவர்களால் அதிகாரப்பூர்வமான மானியமாக நிலம் வழங்கப்பட்டது. கூவம் நதிக்கும் எழும்பூருக்கும் இடையில் ஒரு சிறுபகுதி நிலத்தை தமர்லா பிரிட்டிஷாருக்கு வழங்கினார்.

3. பிரான்சிஸ் டே மற்றும் ஆண்ட்ரு கோகன் ஆகியோருக்கு வணிகத்தளத்துடன் கூடிய தொழிற்சாலைக்கும் மதராசப்பட்டினத்தில் ஒரு கோட்டையை அமைப்பதற்கு 1639ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டது.

4. இக்கோட்டை குடியிருப்பு புனித ஜார்ஜ் குடியிருப்பு எனப் பெயர் பெற்றது. இது வெள்ளை நகரம் எனவும் குறிப்பிடப்படுகிறது. இதன் அருகாமையில் உள்ள கிராமங்களில் மக்கள் வசித்த பகுதி கருப்பு நகரம் எனவும் அழைக்கப்பட்டது.

5. ஆங்கிலேயருக்கு 1645இல் ஸ்ரீரங்கராயப்பட்டினம் எனும் புதிய மானியத்தை பெற்றனர்.

6. வெங்கடபதி அவரது தந்தை சென்னப்ப நாயக்கர் பெயரால் ஆங்கிலேயர்களின் புதிய கோட்டை மற்றும் குடியேற்றங்கள் சென்னபட்டினம் என்று அழைக்கப்பட வேண்டும் என்ற விரும்பினார்.

7. சந்திரகிரியின் ராஜா சர் பிரான்சிஸ் டேவிற்கு 1639இல் நிலம் மானியமாக வழங்கப்பட்டு பின்னர் அது மதராஸ் என அழைக்கப்பட்டது.

8. புனித ஜார்ஜின் தினமான ஏப்ரல் 23, 1640 அன்று இதன் முதல் தொழிற்சாலை கட்டிமுடிக்கப்பட்டு அதற்கு புனித ஜார்ஜ் கோட்டை என்று பெயரிடப்பட்டது.

9. மதராஸ் மாகாணம் ஒரு நிர்வாக துணைப்பிரிவாகும்.

10. 1969இல் மதராஸ் மாநிலம் தமிழ்நாடு என மறுபெயரிடப்பட்டது.

11. ஜூலை 17, 1969இல் மதராஸ் அதிகாரப்பூர்வமாக சென்னை என மறுபெயரிடப்பட்டது.

18) இந்தியா பிரிட்டனின் வேளாண்மை குடியேற்றமாக மாறியது. எப்படி?

**பதில் :** 1. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர்களின் கொள்கைகள் நகரமயமாக்கலுக்கு எதிராக இருந்தது நிருபணமானது.
2. ஆங்கிலேயர்கள் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகள் இந்தியாவின் பொருளாதாரத்தை விரைவாக ஒரு காலனித்துவப் பொருளாதாரமாக மாற்றுவதற்கும் நகரங்களின் வளர்ச்சிக்கும் வழிவகுத்தன.
3. பிரிட்டிஷாரின் ஒரு வழியிலான சுதந்திரமான வர்த்தகத்தின் விளைவாக இந்திய உற்பத்தி தொழில்கள் அழிக்கப்பட்டன.
4. இந்தியாவின் நகர்புற கைவினைத் தொழில்களில் திடீர் சரிவு ஏற்பட்டது.
5. பழைய உற்பத்தி நகரங்களான டாக்கா, மூர்ஷிதாபாத், சூரத் மற்றும் லக்னோ போன்றவை முந்தைய முக்கியத்துவத்தை இழந்தன. 6. உற்பத்தி செய்யும் நகரங்கள் தொழிற்புரட்சியின் விளைவாக அழிந்தன.
7. அதிகப்படியான இறக்குமதி வரி மற்றும் ஏற்றுமதி சார்ந்த பிற கட்டுப்பாடுகள் காரணமாக இந்தியப் பொருட்கள் பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இறக்குமதி செய்யப்படுவது குறைந்தன.
8. இவ்வாறு இந்தியா, பிரிட்டனின் வேளாண்மை குடியேற்றமாக மாறியது.

19) நவீன கால நகரங்கள் பற்றி விவரி.

**பதில் :** (i) ஐரோப்பியர்களின் வருகை நகரங்களின் வளர்ச்சியில் புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தது.
(ii) அவர்கள் முதலில் சூரத், டாமன், கோவா மற்றும் பாண்டிச்சேரி போன்ற சில கடலோர நகரங்களை உருவாக்கினர்.
(iii) இந்தியாவில் தங்களை நன்கு நிலைநிறுத்திக் கொண்ட பிரிட்டிஷார் மும்பை, சென்னை, கொல்கத்தா ஆகிய மூன்று நகரங்களை நிர்வாகத் தலைநகராகவும் வணிக மையங்களாகவும் வளர்த்தனர்.
(iv) ஆளுமையின் பரப்பு விரிவடைய பல புதிய நகரங்களை அதன் அமைவிடத்திற்காகவும் தேவைக்காகவும் வளங்களுக்காகவும் உருவாக்கினர்.
(v) புதிய வளர்ச்சி பெற்ற நகரங்கள், மலை நகரங்கள், தொழில் நகரங்கள், நீதிமன்ற நகரங்கள், இருப்புப்பாதை நகரங்கள், இராணுவ குடியிருப்புகள் மற்றும் நிர்வாக நகரங்களாக விளங்கின.

20) இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சியில் உள்ளாட்சி மன்றத்தின் வளர்ச்சியை விவரிக்கவும்.

**பதில் :** **1. முதல் கட்டம் (1688 - 1882) :**
i. இந்தியாவில் நகராட்சி அரசாங்கம் 1688இல் சென்னையில் ஒரு மேயருடன் உருவானது.
ii. கிழக்கிந்திய கம்பெனியின் இயக்குநர்களில் ஒருவரான சர் ஜோசியா சைல்டு மாநகராட்சி உருவானதற்கு காரணமாக இருந்தார்.
iii. மூன்று மாகாண நகரங்களில் 1793ஆம் ஆண்டின் பட்டயச் சட்டம் நகராட்சி நிர்வாகத்தை நிறுவியது.
iv. வடமேற்கு எல்லைப்புற மாகாணங்கள், அயோத்தி மற்றும் பம்பாயில் நகராட்சிகள் 1850ஆம் ஆண்டு சட்டப்படி அமைக்கப்பட்டன.
v. மேயோ பிரபுவின் 1870ஆம் ஆண்டின் புகழ்பெற்ற தீர்மானம் உள்ளாட்சி அரசாங்கத்தின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

**2. இரண்டாம் கட்டம் (1882 - 1920) :**
i. உள்ளாட்சி அரசாங்கம் தொடர்பான ரிப்பன் பிரபுவின் தீர்மானம் உள்ளாட்சி அரசாங்கத்தின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக விளங்கியது.
ii. எனவே ரிப்பன் பிரபு இந்தியாவின் 'உள்ளாட்சி அமைப்பின் தந்தை' என்று அழைக்கப்படுவது பொருத்தமானதாகவும் அவரது தீர்மானம் 'உள்ளாட்சி அரசாங்கத்தின் மகாசாசனம், எனவும் கருதப்படுகிறது'.

**3. மூன்றாம் கட்டம் (1920 - 1950) :**
i. மாகாணங்களில் இரட்டை ஆட்சியை 1919ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் அறிமுகப்படுத்தியது.
ii. மாகாண சுயாட்சியை 1935ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் அறிமுகப்படுத்தியது.
iii. 1947இல் சுதந்திரம் அடைந்தவுடன் சுதந்திர இந்தியாவின் தேவைகளைப் பூர்த்திசெய்ய உள்ளாட்சி அரசாங்கத்தை உருவாக்கி வடிவமைப்பதற்கான சிறப்பான வாய்ப்பை இந்தியா பெற்றது.